*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 484/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திரு.செந்தில்குமார் த/பெ. மணி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.06.2026.**

துவக்க நேரம் 01.22 A.N

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் U/s. 355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கடம்பூரில் குடியிருந்து, மெடிக்கல் கடை வைத்து நடத்தி வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த 2023ம் வருடம் ஒருநாள் எனது மெடிக்கல் கடைக்கு அருகில் வெளியே ஒரு சண்டை நடந்தது. நான் அந்த சண்டையை விலக்கிவிட அருகில் சென்றபொழுது அந்த சண்டை நடந்த கூட்டத்தில் இருந்தவர்கள் என்னை கீழே தள்ளியதில் எனக்கு காயம் ஏற்பட்டது.

2) எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான், கெங்கவல்லி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான், கெங்கவல்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபொழுது அங்கு வந்த கெங்கவல்லி போலிசாரிடம், எதிரி அந்த கூட்டத்தில் இருந்ததால் அவரது பெயரை சொல்லிவிட்டேன். பின்னிட்டுதான் எதிரி, என்னை கீழே தள்ளவில்லை என்று எனக்கு தெரிந்தது. என்னிடம் காட்டப்படும் புகார்

வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரர் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்யவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 15.10.2023 அன்று காலை 07.55 மணியளவில் நான், வைத்திருந்த மெடிக்கல் கடைக்கு, எதிரி மனோகரன் அவரது குழந்தை மயக்கமாக இருப்பதாக சொல்லி எனது மெடிக்கல் கடைக்கு வந்து மருந்து கேட்டபொழுது, நான், மருத்துவரிடம் என்ன மருந்து கொடுக்கலாம் என்று கேட்டுக்கொண்டிருந்தபொழுதே, எதிரி மனோகரன், நான் மாத்திரை கேட்கிறேன், நீ போன்ல பேசிகிட்டு இருக்க என்று சொல்லி என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, எனது இடது கன்னத்தில் குத்தியதால் நான் போட்டிருந்த கண்ணாடி உடைந்து எனது கண் கலங்கி வலி ஏற்பட்டதாகவும், நான் உடனே செல்போனில் படம் பிடிக்க முயற்சித்தபொழுது எதிரி, எனது செல்போனை பிடுங்கி எரிந்துவிட்டு, கீழே கிடந்த கட்டையை எடுத்து எனது இடது தோள்பட்டையில் அடித்ததாகவும், பின்பு எதிரி, எனக்கு கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்பொழுது எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 01.37 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.06.19 15:57:29 +0530

Judicial Magistrate No.2, Attur.